1987 நவம்பர் 13]

(ஆ) அண்ணா மாவட்டத்தில் கொடைக்கானலில் 1979-ல் ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டிலும், நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 1985-ல் ரூ. 61 இலட்சத்திலும் பாலாடைக் கட்டி தொழிற்சாலை நிறுவப்பட்டுள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது மாதிரி பாலாடைக் கட்டி தயாரிக்கும் தொழிற்சாலையை வேறு இடங்களிலும் நிறுவ அரசு முன் வருமா ? இங்கே பால் தட்டுப்பாடு இருக்கிறது. அதனால் வெளி நாடுகளிலிருந்து பால் வாங்க நடவடிக்கையோ அல்லது மாடு வாங்க நடவடிக்கையோ அரசு எடுத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாலாடைக் கட்டிக்கு நல்ல கிராக்கி இருக்கிறது. ஆனால் பால் போதிய அளவுக்கு, பாலாடைக் கட்டி தயாரிக்கும் அளவுக்குக் கிடைக்காததால் மேற்கொண்டு பாலாடைக் கட்டி உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் தற்போது இல்லை.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மகாத்மா காந்தி அவர்கள் வெள்ளாட்டுப் பாலை விரும்பிச் சாப்பிட்டவர்கள். அது உடம்புக்கு நல்லது, குழந்தைகளுக்கு நல்லது. ஆகவே ஆட்டுப்பால் சாப்பிடவேண்டுமென்று மனிதர்களை வற்புறுத்துவதோடு, பாலாடைக் கட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளில் ஆட்டுப் பாலிலிருந்து பாலாடைக் கட்டி தயாரிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆட்டுப் பால் போதிய அளவுக்குக் கிடைக்காது. அது போதிய அளவுக்குக் கிடைத்தால்தான் அதிலிருந்து பாலாடைக் கட்டி உற்பத்தி செய்யும் யோசனையை ஏற்க முடியும்.

கீரிப்பாறை தொழில் கூடத்தில் ரப்பர் விற்பனை.

107—(*வினா எண் 7601)—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு ரப்பர் கழகத்தில் கீரிப்பாறை தொழில் கூடத்திலிருந்து 18–10–1985 அன்று ரப்பர் எடை போட்டு விற்பனை செய்ததில் நடந்த முறைகேடு சம்பந்தமாக அரசு என்ன நடதவடிக்கை மேற்கொண்டுள்ளது ?

[1987 நவம்பர் 13

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு ரப்பர் கழகத்தில், கீரிப்பாறை தொழில் கூடத்திலிருந்து 18–10–1985 அன்று ரப்பர் எடை போட்டு விற்பனை செய்ததில் முறைகேடுகள் ஏதும் நிகழவில்லை. ஆனால், விற்பனை செய்யப்பட்ட ரப்பரை அனுமதிக்கப்பட்ட நேரம் கடந்தும் வெளியே அனுப்பப்பட்டது. இது சம்பந்தமாக மூன்று தொழில் கூட சரகர்கள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். தொழிற் கூட மேலாளர், கழகத்திலிருந்து தாய்த் துறையான வனத்துறைக்கு மாற்றப் பட்டுள்ளார். ஒரு புதிய எடை மேடை, தொழிற்சாலையிலேயே அமைக்கப்பட்டுள்ளது. சரக்குகள் வெளியே அனுப்பு முன்னர், இம்மாதிரியான நிகழ்ச்சிகள் இனி நிகழா வண்ணம் செய்ய மேலதிகாரிகளால் மாதிரி சோதனை முறைகளை மேற்கொள்ளவும், நிர்வாக முறைகளிலும், விதிகளிலும், தக்க மாற்றங்கள் செய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசு ரப்பர் கழகத்தில் முறைகேடான முறையில் ரப்பர் விற்கப்படுகிறது என்ற முறையிலேதான் பல புகார்கள் வந்தன. 1986 மே மாதத்திலே அங்கே 80 டன் குறைபாடு ஏற்பட்டதாகவும், அது சம்பந்தமான விவரங்கள் 8–6–1986, 15–6–1986 கல்கி பத்திரிக்கையில் போடப்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து அங்கே பல குழப்பங்கள் ஏற்பட்டு, தொழிலாளர்கள் பழி வாங்கப்பட்ட நிலை கூட ஏற்பட்டது. இப்படிப்பட்ட நிலை அங்கே தொடர்ச்சியாக ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், அதிகாரிகள் மேலே கடுமையான நடவடிக்கைகளை அந்த நிர்வாகம் எடுக்கவில்லை. நிர்வாகம் நடவடிக்கை எடுக்காததால்தான் இப்படிப்பட்ட முறைகேடுகள் ஏற்பட்டு வருகின்றன என்பதால், அரசு சம்பந்தப்பட்டவர்கள்மேல் தகுந்த கடுமையான நடவடிக்கை எடுத்து, அரசினுடைய வருவாயைப் பாதுகாக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னது போல, 28–5–1986 அன்று நிர்வாக இயக்குநர் சம்பந்தப்பட்ட 3 சரசர்களை மனோகரன், அருள்சாமி, ஆண்டியப்பன் ஆகியவர்களைத் தற்காலிக வேலை நீக்கம் செய்தார்கள். தற்போது கண்காணிப்பு மற்றும் இலஞ்ச ஒழிப்புத் துறை தனியாக இது குறித்து நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருப்பதால் 1986-லிருந்து தற்காலிக வேலை நீக்கத்தில் உள்ளவர்களுக்கு 6–11–1987 முதல் மீண்டும் பணி கொடுக்கப்பட்டு,

1987 நவம்பர் 13]

அவர்களுக்கு மேலே உள்ள அசிஸ்டென்ட் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் மாற்றப்பட்டுள்ளார். இது போன்ற முறைகேடுகள் நடக்காமல் இருக்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்கு மிக முக்கிய காரணமாக இருந்த அசிஸ்டென்ட் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் அவர்களுக்கு அந்த பாக்டரியிலிருந்து இட மாற்றம் மாத்திரம் செய்து, அந்த அதிகாரி மேல் தகுந்த நடவடிக்கை எடுக்காமல், கீழே உள்ள அதிகாரிகள் மேல் நடவடிக்கை எடுக்கப்படுவதால், அங்கே பெரிய அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளை மீண்டும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்கக் கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த அசிஸ்டென்ட் கன்சர்வேட்டர் ஆப் பாரஸ்ட் பொறுத்த அளவிலே அவருக்குப் புரமோஷன் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அவர் மேலே தகுந்த நடவடிக்கை எடுத்து, ஒரு நல்ல முறையை அரசு ஏற்படுத்துமா?

(முற்பகல் 11-00).

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே முதலிலேயே விடையிறுத்தபோது இது பற்றி சொன்னேன். எந்த முறை கேடுகளும் இல்லை. உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட லாரிகள் வெளியிலே அனுப்பப்படவில்லை என்ற குறைதான் இருந்தது என்று சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது குற்றச்சாட்டு இருந்தால், தந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

தேக்கு, சிசு மரங்களை பொது ஏலத்தில் விடுதல்.

108—(*வினா எண் 9489—திரு. பாப்பா சுப்பிரமணியன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில், பொதுப் பணித்துறைக்குச் சொந்தமான ஆற்றங்கரைகளில் விழுந்த தேக்கு, சிசு மரங்களை பொது ஏலத்தில் விடும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?